**மூன்றாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம், திருச்சிராப்பள்ளி.**

**அசல் வழக்கு எண்.418/2021**

முன்னிலை - பா.சரவணன், பி.எஸ்ஸி.பி.எல்.,
மூன்றாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி, திருச்சிராப்பள்ளி.

2025 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 02 ஆம் நாள் செவ்வாய்கிழமை வாதி தரப்பில் முதலாவது சாட்சியின் வாக்குமூலம் (1969 ம் ஆண்டு 54 விதியின் 9 வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.நாகராஜ், உதவியாளர் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | விநாயகமூர்த்தி | தந்தை பெயர் | : | வைரன் |
| ஜாதி | : | | கிராமம் | : | |
| வட்டம் | : | | மதம் | : | |
| தொழில் | : | | வயது | : | |

நாள் : 02.09.2025

**P.W. : 1**

**வாதிகள் தரப்பில் முதல் விசாரணை**

நான் முதல் வாதி ஆவேன். எனது முதல்விசாரணைக்காக பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். 22.04.1958 ஆம் தேதி ஏற்பட்ட பாக பிரிவினை பத்திரத்தின் பதிவு நகல் - **வா.சா.ஆ.1** ஆகும். தந்தை வைரனின்

இறப்புச் சான்றிதழ் - **வா.சா.ஆ. 2** ஆகும். என் தந்தையின் வாரிசு சான்றிதழ் **வா.சா.ஆ.3** ஆகும். திருச்சி மாவட்டம், ஸ்ரீரங்கம் வட்டம் அதவத்தூர் கிழக்கு கிராமம் பட்டா எண்.1648 க்கான கணினியில் பதிவிறக்கம் செய்யப்பட்ட பட்டா நகல் **வா.சா.ஆ.4** ஆகும். மேற்படி கிராமம் பட்டா எண்.1641 க்கான கணினியில் பதிவிறக்கம் செய்யப்பட்ட பட்டா நகல் **வா.சா.ஆ.5** ஆகும். தாவா சொத்து தொடர்பான 15.09.1980 முதல் 31.12.1990 வரை உள்ள காலத்திற்கான வில்லங்கச் சான்று **வா.சா.ஆ.6** ஆகும். தாவா சொத்து தொடர்பான 01.01.1968 முதல் 31.12.1974 வரை உள்ள காலத்திற்கான வில்லங்கச் சான்று **வா.சா.ஆ.7** ஆகும். என் அண்ணன் மாணிக்கத்தின் இறப்புச் சான்றிதழ் **வா.சா.ஆ.8** ஆகும். என் அண்ணன் மாணிக்கத்தின் மகள் இராஜலிங்கத்தின் இறப்புச் சான்றிதழ் **வா.சா.ஆ.9** ஆகும். 06.09.2021 அன்று நாங்கள் பிரதிவாதிகளுக்கு அனுப்பிய வழக்கறிவிப்பின் அலுவலக நகல் **வா.சா.ஆ.10** ஆகும். அதற்கான அஞ்சலக ரசீதுகள் **வா.சா.ஆ.11** வரிசையாகும். 27.09.2021 அன்று 1 ஆம் பிரதிவாதி அவரது வழக்கறிஞர் மூலம் அனுப்பிய பதிலறிவிப்பு **வா.சா.ஆ.12** ஆகும். எனது ஆதார் அட்டை நகல் **வா.சா.ஆ.13** ஆகும்.

(வேண்டுகோளின் படி முதல் விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.)

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டி சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

மூன்றாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி.

திருச்சிராப்பள்ளி.